செ.வெ.எண்-46 நாள்-28.03.2017

# அரியலூர் மாவட்டத்தில் அம்மா திட்டம் வருவாய்துறை முகாம்கள் 31.03.2017 அன்று நடைபெறுகிறது.

அரியலூர் மாவட்டத்தில் ஒவ்வொரு வட்டத்திலும் நான்காம் கட்டமாக தலா ஒரு கிராமம் வீதம் அம்மா திட்ட முகாம் 31.03.2017 அன்று வருவாய் வட்டாட்சியர் தலைமையில் பின்வருமாறு நடைபெற உள்ளது.

**உடையார்பாளையம் வட்டத்தில்** வானதிரையான்பட்டிணம், ஆமணக்கந்தோண்டி, எரவாங்குடி கிராமங்களிலும், **அரியலூர் வட்டத்தில்** அருங்கால், சன்னாவூர் (வ) கிராமங்களிலும், **செந்துறை வட்டத்தில்** சன்னாசிநல்லூர் கிராமத்திலும் நடைபெறுகிறது.

இம்முகாமில் வருவாய்த்துறையின் சமூகப் பாதுகாப்புத்திட்டங்கள், பட்டா மாறுதல், இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், பிறப்பு, இறப்பு சான்றிதழ், சாதி சான்றிதழ் ஆகியவற்றில் தகுதி பெற்ற மனுக்களின் மீது உடனடியாக தீர்வு வழங்கப்படும்.

பொதுமக்கள் இந்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.